**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 12.03.2026

SC. 255/2022

**அ.சா 2 – ராஜன்ராவ்**

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் ராஜன்ராவ் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜன்ராவ் | தந்தை பெயர் | நரசிங்கராவ் |
| வயது | 46 | கிராமம் | -- |
| வட்டம் | ஒசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. )**

**முதல் விசாரணை : –**

நான் ஒசூர் கிராமத்தில் குடியிருந்து ஜெய் காம்பளக்ஸ் ரோட்டில் பழைய பெங்களுரு ரோடு அருகே கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா 1 ஐ எனக்கு தெரியும் அவர் எனது நண்பர் ஆவார். கடந்த 17.06.2022 ம் தேதி இரவு 9.00 மணிமுதல் 9.15 மணி இருக்கும் அப்போது, எனது நண்பர் ராஜ்குமார் எனக்கு போன் செய்து ஜொனபெண்டா உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகில் நின்று கொண்டிருந்தபோது, 3 நபர்கள் வந்து தன்னை கீழே தள்ளிவிட்டு பிடித்து கொண்டு , கத்தியை காண்பித்து மிரட்டி , எனது பையில் இருந்த பணத்தையும் காரையும் பறித்து கொண்டு சென்று விட்டார்கள் என்று எனக்கு தகவல் சொன்னார். பின்னர் ,நான் அன்றிரவு 9.30 மணியைபோல் அவருடன் சென்று அவரையும் அழைத்து கொண்டு அவரது காரை நானும் அவரும் தேடினோம், கிடைக்காததல் வீட்டிற்கு சென்று விட்டோம். பின்னர் , மீண்டும் மறுநாள் காரை நானும் அவரும் தேடினோம், கிடைக்காததல் 18.06.2022 ம்தேதி

அவர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். பின்னர், சிறிது நாள் கழித்து போலிசார் அவருக்கு போன் செய்து தகவல் சொன்னதாக அவர் என்னிடம் சொன்னார். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**( எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகாதால், எதிரிகளிடம் , சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு கொடுக்கப்படும் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்பதாகல், குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 12.03.2026

SC. 255/2022

அ.சா 1 – ராஜ்குமார்

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 12 ம் நாள் ராஜ்குமார் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்குமார் | தந்தை பெயர் | கோவிந்தராஜ் |
| வயது | 40 | கிராமம் | பைரமங்கலம் |
| வட்டம் | தேன்கனிக்கோட்டை | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**( எதிரிகள் ஆஜர் எதிரி, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. )**

**முதல் விசாரணை : –**

நான் பைரமங்கலம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 17.06.2022 ம் தேதி காலை 6.00 மணியைபோல் மத்திகிரியில் உள்ள எனது நண்பர் திருநாவுக்கரசு என்பவரை அழைத்து கொண்டு அவரது தாயாரின் நினைவு நாள் என்பதால் எனக்கு சொந்தமான TN 70 T 4116 TATA ZEST என்ற காரில் ஆரணி சென்றுவிட்டு திரும்பும் போது அவரை மீண்டும் மத்திகிரியில் இறக்கிவிட்டு விட்டு அன்றைய தினம் இரவு 8.15 மணியைபோல், ஜொனபெண்டா என்ற ஊர் அருகில் ஆஞ்சநேயர் கோவில் அருகே வாகனத்தை நிறுத்தி விட்டு சிறுநீர் கழிப்பதற்காக சென்றேன். அப்போது எனது காருக்கு பின்னால் வந்த 3 நபர்கள் என்னை கீழே தள்ளி விட்டு கத்தியை கழுத்தில் வைத்தார், அதில் ஒருவர் எனது காலை பிடித்து கொண்டார். அதில் மற்றொருவர் இரண்டு கைகளை பிடித்து கொண்டார். பின்னர், அவர்கள்

மூவரும் உன்னிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்று மிரட்டினார்கள். நான் 2000/- உள்ளது என்று கூறினேன். உடனே அதில் ஒருவர் எனது சைட்டைப்பையில் இருந்து 2000 /- ரூபாயை கையை விட்டு எடுத்து கொண்டார். பின்னர் கார் சாவியை கொடுக்கும் படி மிரட்டினார்கள் நான் மறுத்தேன். உடனே அவர்கள் என்னை கொன்றுவிட்டாவது சாவியை எடுத்து கொண்டு சென்று விடுவோம் என்று மிரட்டினார்கள் பின்னர் நான் பயந்து கொண்டு சாவியை அவர்களிடம் கொடுத்து விட்டேன். ஏற்கனவே, எங்கள் மீது கொலை வழக்கு உள்ளது என்றும், காரை நாங்கள் மத்திகிரியில் விட்டுவிட்டு சென்று விடுகிறோம். பின்னால் வந்தால் என்றால் கொன்று விடுவோம் என்று சொல்லி எனது செல்போனை பறித்து Switch off செய்து விட்டு கீழே போட்டு விட்டு 2 நபர்கள் காரை எடுதது கொண்டும் அதில் ஒருவர் அவர் வந்த Scooter Dio என்ற இரு சக்கர வாகனத்தை எடுத்து கொண்டும் சென்று விட்டார்கள். நான் பயந்து கொண்டு சிறிது நேரம் அங்கேயிருந்தேன்.

2. பின்னர் எனது செல்போனை எடுத்து On செய்து எனது நண்பர் ராஜன்ராவ் என்பவருக்கு போன்செய்து நடந்த விவரத்தை தெரிவித்தேன். உடனே அவர் இரு சக்கர வாகனத்தில் அங்கு வந்து விட்டார். நாங்கள் இருவரும் காரை தேடினோம் கிடைக்காததாலும், எனக்கு பயம் அதிகம் ஆனதாலும் , இருவரும் வீட்டிற்கு சென்று விட்டோம். பின்னர் மறுநாள் அதே பகுதியில் நானும், ராஜன்ராவ், ரவிச்சந்திரன் ஆகியோர் மூவரும் காரை தேடினோம் கிடைக்காததல் மறுநாள் 18.06.2022 ம் தேதி மத்திகிரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அ.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பின்னர் , சுமார் 1 1/2 மாதம் கழித்து 28.08.2022 ம் தேதி போலிசார் எனக்கு போன் செய்து எனது கார் கிடைத்து விட்டதாக சொன்னார்கள். பின்னர், நான் காவல் நிலையம் சென்று எனது காரை அடையாளம் காட்டினேன். எனது காரை , எதிரிகள் அடித்து சேதப்படுத்தி இருந்தார்கள். பின்னர் போலிசார் தருமபுரி மாவட்ட சிறைச்சாலைக்கு எதிரிகளை அடையாளம் காட்ட வரச்சொன்னார்கள். நான் 29.08.2022 ம் தேதி சிறைச்சாலைக்கு சென்றேன். அங்கு நீதிபதியும் வந்திருந்தார். அவர் அடையாள அணிவகுப்பை நடத்தினார். அடையாள அணிவகுப்பில் 9 நபர்கள் நிறுத்தி வைத்திருந்தார்கள். அங்கு எதிரியும் இருந்தார்கள் பின்னர் 7 நபர்கள் நிறுத்து வைக்கப்பட்டார்கள். அதிலும் எதிரிகள் இருந்தார்கள். அப்போது நான் 3 எதிரிகளையும் , நீதிபதி அவர்களிடம் அடையாளம் காட்டினேன். அடையாள அணிவகுப்பில் 29.08.2022 ம் தேதி காலை 10.45 மணியில் இருந்த 12.30 மணிவரை நடந்தது. சிறைச்சாலையில் நான் அடையாளம் காண்பித்த நபர்கள் தான் இன்று நீதிமன்றத்திலும் ஆஜராகி உள்ளார்கள். அவர்கள் தான் என்னை தாக்கி மிரட்டி என்னிடம் பணத்தையும் காரையும் பறித்து சென்றவர்கள் ஆகும். பின்னர் காரை மனு செய்து இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன்.

4. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் , புகைப்படத்தில் உள்ள கார் தான் என்னுடையது ஆகும். அந்த காரின் (TN 70 T 4116 TATA ZEST) புகைப்படம் (எண்ணிக்கை 5) **அ.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கத்தியால் தான் எதிரிகள் என் கழுத்தில்வைத்து மிரட்டினார்கள். அந்த மடக்கு நிலையில் உள்ள ஸ்டீல் சூரிகத்தி ( மொத்தம் 17 செ,மீ நீளம் அதில் , வெட்டுப்பாகம் 8 செ.மீ , கைப்பிடி பாகம் 9 செ.மீ அளவுடையது ) **அ.சா.பொ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**( எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகாதால், எதிரிகளிடம் , சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்பு கொடுக்கப்படும் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்பதாகல், குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது. )**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur